இரண்டாவது ஆண்டு தொடக்க இதழ்
தித்திக்கும் தேனேடாக
இப்போது எங்கும் விற்பனையாகிறது!
சுடர்
விலே ரூபா 1-00

சுதந்திரன்
SUTANTIRAN
விலே சதம் 60. தொலேபேசி : 23411
நிறுவியது: 1947.
வள்ளுவர் ஆண்டு 2007 சித்திரை—20, ஜ.அவ்வல்—24 (2-5-76) ஞாயிறு புத்தகம் 30, இதழ் 3

# யாழகத்தில் 'மே' நாள் ஊர்வலம்!

## ஒன்பது அணிகள், 10 தொழிற் சங்கங்கள் ஒருமித்து காண்பிக்கப் போகும் பேரெழுச்சி!

யாழ்ப்பாணத்தின் வரலாறே இதற்கு முன் கண்டிராத அளவுக்கு மாபெரும் 'மே' நாள் எழுச்சி ஊர்வலமொன்றை மே முதல் நாள் சனிக்கிழமை தமிழர் கூட்டணியின் ஆதரவுத்தொழிற்சங்கங்கள் கூட்டாக நடத்துகின்றன. இந்த ஊர்வலத்துக்கு மூதறிஞர் செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் உடுப்பிட்டி சிவா ஆகியோர் தலேமை தாங்கி வழி நடத்துகிறுர்கள். இந்த ஊர்வலத்தில் ஒன்பது அணிகள் பங்குபற்றும்; பத்து தொழிற் சங்கங்கள் பங்குபற்றும்; அத்துடன் கலே நிகழ்ச்சிகள், வண்டிச்சவாரிகள் போன்ற அம்சங்களும் இடம் பெறுகின்றன. ஊர்வலத்தில் தமிழர் கூட்டணித் தலேவர்களும் பா. உ. க்களும் பங்கேற்கின்றனர். ஊர்வல இறுதியில் கோட்டை மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்துடன் 'மே' நாள் எழுச்சிவிழா நிறைவு பெறும்.


தமிழர் கூட்டணியின் ஆதரவுடன் மொழிவழித் தொழிற்சங்கங்கள் நடாத்தும் 'மே' நாள் பெருவிழா 1-5-76 சனிக்கிழமை மாலே 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெறுகிறது.

அன்று பிற்பகல் 1மணிக்கு காங்கேசன்துறை வீதியிலுள்ள நாச்சிமார் கோவில் முன்றலில் கிருஷ்ணமூர்த்தி குழுவினரின் இசைக் கச்சேரி தவில்மேதை நாச்சிமார் கோவிலடி கணேசன் குழுவினரின் தவில்கச்சேரி முதலியன இடம்பெறும்.

அங்கிருந்து பிற்பகல் 3மணிக்கு கோட்டை மைதானம் நோக்கி ஆரம்பமாகும் பிரமாண்டமான 'மே' நாள் ஊர்வலத்தில் — தொழிலாளர் அணி, விவசாயிகள் அணி, இளேஞர் அணி, மகளிர் அணி, துவிச்சக்கரவண்டிகள் அணி, மோட்டார் வாகன அணி, மாட்டுவண்டிகள் அணி, உழவு இயந்திரங்கள் அணி, வர்த்தகர் அணி —அத்துடன் கரகம், காவடி, கிருஷ்ணமூர்த்தி குழுவினரின் இசை, கண்ணன் குழுவினரின் மெல்லிசை இன்னும் பல சிறப்பு நிகழ்சிகளும் இடம்பெறும். மே நாள் சுலோகங்கள் ஊர்வலத்தில் விண்ணதிர மண்ணதிர எழுப்பப்படும்.

தொழிலாளர் அணிக்கு திரு. சே ம. செல்லத்தம்பு பா. உ.வும் மகளிர் அணிக்கு திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும், இளேஞர் அணிக்கு திரு. இரகுபதி பாலஸ்ரீதரனும், மாணவர் அணிக்கு சட்டத்தரணி வெ.

—5-ம் பக்கம் பார்க்க




# மலேயகத்தில் மனித வேட்டை!

## தமிழ்த் தொழிலாளர்கள் திடீர்திடீரெனக் கைது!

### 'மே' நாளில் பாட்டாளிகளுக்கு ஆட்சியாளர் தரும் 'மரியாதை'!

தொழிலாளர் தினமான 'மே' நாளே தடபுடலாகக் கொண்டாடும் இலங்கையரசு, மலேயகத்தின் வளத்துக்காக தலேமுறை தலேமுறையாக பாடுபட்டுழைத்து, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்கீழ் நாட்டைவிட்டேக விருந்த தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களே மனிதாபிமானம் கொஞ்சம் கூடவின்றி மிலேச்சத்தனமானமுறையில் வேட்டையாடி வருகிறது. இந்தியப் பிரஜாவுரிமைபெற்று 'விசா'வில் இங்கு வாழ்ந்துவந்த மலேயகத் தோட்டத் தொழிலாளர்களே அவர்களது விசா முடிந்துவிட்ட ஒரே காரணத்துக்காக திடீர் திடீரெனக் கைதுசெய்து இழுத்துச்சென்று கொம்பனித்தெருவிலுள்ள தடுப்பு முகாமில் மிருகங்கள்போல அடைத்துவைத்துவருகிறுர்கள் அரசு அதிகாரிகள். இந்த மிலேச்சத்தனமான அட்டூழியத்தையடுத்து மலேயகமெங்கும் பெருங் கொந்தளிப்பும், கலவரநிலேயும், பரபரப்பும் ஏற்பட்டுள்ளது, குடும்பத்தலேவர்கள் மட்டும் கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டதையடுத்து அவர்களது மனேவிகள், குழந்தைகள் கையறு நிலேயில் கலங்கி நிற்கின்றனர். இவர்களுக்கு இ. தொ. கழகத் தலேவர் தங்கத்துரை, ஜெயக்கொடி பா. உ. ஆகியோர் ஆறுதல் கூறினர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்கள், பதினேந்தாண்டு காலத்திற்குள் இந்தியா திரும்பலாமென்றும், அவர்கள் இந்தியா திரும்புகிறவரை, இலங்கையில் முன்புபோல வேலேசெய்வதற்கும் வாழ்வதற்கும் அவர்களுக்கு உரிமையுண்டென்றும், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனல் இந்த ஒப்பந்த விதிகளுக்குமாருக—'விசா' முடிந்த இந்தியப் பிரிஜாவுரிமைபெற்ற மலேயகத் தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களே பலாத்காரமாக கைதுசெய்துகும்பனித்தெருவிலுள்ள தடுப்பு முகாமில் அடைக்கும் வேலேயில் குடிவரவு குடியகல்வு திணேக்கள அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறுர்கள்.

மனிதாபிமானம்கிஞ்சிற்றுமற்று மலேயகத்தில் நடைபெறும் இந்த மிலேச்சத்தனமான மனித வேட்டையால் மலேயகமெங்கும் பெருங் கொந்தளிப்பும் கலவரநிலேயும் உருவாகியுள்ளது. பல குடும்பங்கள் பிரிக்கப்பட்

— 5-ம் பக்கம் பார்க்க

## விருப்ப பாடம் என்ற போர்வையில் சிங்களம் நுழைகிறது!

விருப்பபாடம் என்ற போர்வையில் தேசிய கல்விப் பொதுத்தராதர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களிடையே இவ்வாண்டு முதல் சிங்களம் நுழைக்கப்படுகிறது. தமிழ் மாணவர்கள் விருப்பபாடமாக சிங்களத்தையும் சிங்கள மாணவர்கள் விருப்பபாடமாக தமிழை படிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின்படி ஆட்சிமொழியான சிங்களம் தமிழ மாணவர்களிடையே 'விருப்பபாடம்' என்ற போர்வையுடன் மறைமுகமாகத் திணிக்கப்படுகிறது; ஆளப்படும்இனத்தின் மொழியான தமிழை—ஆட்சிமொழி அந்தஸ்து இல்லாத தமிழை எந்தச் சிங்கள மாணவன் விருப்பபாடமாகப் படிக்கப்போகிறுன்? ஆனல் சிங்களம் ஆட்சிமொழி; உத்தியோகமொழி;அரசியல் சட்டரீதியான அந்தஸ்துள்ளமொழி; உத்தியோகம் நிலேபெறுவதற்கு கட்டாயமொழி; என்று பல்வேறு வழிகளில் சிங்களத்தின் இன்றியமையாமை இந்நாட்டில் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. எனவே, விருப்பபாடம் என்ற போர்வை தமிழ் மாணவர்களின் மீது மறைமுக சிங்களத்திணிப்பாக கருதப்படவேண்டியதே தவிர—சிங்கள மாணவர்களுக்கு தமிழையும் ஒரு விருப்பபாடமாக்கியிருக்கிறேம் என்பது வெறுங்கண்துடைப்பு—என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லே!

தமிழ் ஈழத்தேசத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தர்மப்போரின் இறுதிவெற்றிக்கு வழி யென்ன? அர்ச்சுனன் வாயிலாக அதை நமக்கு கூறுகிறுன் பாரதி!"

## விடுதலைக்கவிஞர்கள் விழாவில் நாவலர் அமிர்தலிங்கம் பேருரை!

"துரியோதனன் சபையிலே, பாஞ்சாலி துச்சாதனனுல் துகிலுரியப்படும் கட்டத்தில் பொங்கியெழுகின்றுன் வீமன். அர்ச்சுனனைப் பார்த்து "இது பொறுப்பதில்லை தம்பி. எரிதழல் கொண்டுவா—கதிரை வைத்திழந்தான்—அண்ணன் கையை எரித்திடுவோம்" என்று குமுறுகிறுன். அப்போது "என்ன சொன்னுய் வீமா" என்றழைத்து அவனுக்குப் பதில் சொன்ன அர்ச்சுனன், 'தருமத்தின் வாழ்வுதனைச் சூதுகவ்வும்—தர்மம் மறுபடி வெல்லும் எனுமியற்கை மருமத்தை நம்மாலே உலகம் கற்கும் வழி தேடி விதி இந்தச் செய்கை செய்தான் தருமத்தை மென்மேலும் காண்போம்—இன்று கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்; தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்—தனு உண்டு, காண்டீபம் அதன் பேர்'' என்று கூறுகிறுன். பாரதி கண்ட அர்ச்சுனனைப் போலவே நாமும் தமிழ்த் தாயின் இன்றைய அவல நிலை கண்டு வீமன் போலப் பொங்கியெழும் தமிழ்த் தம்பியர்களுக்கு கூறுகிறேம்—தர்மத்தை நிலை நாட்டுவதற்கு ஒரு நாள் வரும்; இன்று கட்டுண்டோம் பொறுத்திருப்போம். காலம் மாறி சூழ் நிலை சாதகமாக வரும்போது "காண்டீபம் எனும் தனு" கொண்டு தர்மப் போரில் வெல்லுவோம். ஆம், அதாவது தர்மத்தை நிலை நாட்டுவதற்கான இறுதிப்போர் எப்படி நடக்கவேண்டும் என்பதையும் பாரதி அர்ச்சுனன் வாயிலாக அன்றே நமக்கு கூறிவைத்திருக்கிறுன்! அதை நாம் உணராமலில்லை"

இவ்வாறு கொழும்பு சரசுவதி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

24-4-76 மாலை கொழும்பு சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற விடுதலைக் கவிஞர் விழாவில் முறையே மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை பா. உ. பாரதிதாசனைப்பற்றியும், நாவலர் அ. அமிர்தலிங்கம் பாரதியைப்பற்றியும், ஜனுப் உதுமாலெப்பை இக்பாலைப் பற்றியும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் காசி ஆனந்தனைப் பற்றியும் உரை நிகழ்தினர். இவ்விழாவிற்கு தமிழ் இளைஞர் பேரவை கொழும்புக் கிளையின் தலைவர் இரகுபதி பால ஸ்ரீதரன் தலைமை தாங்கினுர். கூட்டம் செ. இராசதுரை பா. உ. அவர்களின் தமிழ் ஈழ வாழ்த்துப் பாவுடன் ஆரம்பமானது.

### இராசதுரை பேச்சு

செ. இராசதுரை தமது உரையில்எந்த நூற்றுண்டுக்கும் இல்லாத தனிச் சிறப்பு இந்த நூற்றுண்டுக்கு உண்டு. ஏனெனில் உலகில் பல நாடுகள் சுதந்திரம் பெற்றது இந்த நூற்றுண்டிலேதான்—இது விடுதலை நூற்றுண்டு. ஆனுல் எல்லாம் விடுதலை பெற்றும் தமிழுக்கு மட்டும் இன்னும் விடுதலை இல்லை—இந்த நூற்றுண்டில் தமிழுலகில்—தமிழ் நாட்டில் புதிய வேகத்தை உண்டு பண்ணத் தோன்றிய கவிஞன்தான் பாரதிதாசன் — அவன் கவிதையின் படியே நாம் ஒன்றுபடுவோம்... என்ருர்.

### அமிர் முழக்கம்

அவரைத் தொடர்ந்த பாரதியைப் பற்றி உரை நிகழ்த்திய நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் தன் உரையில் கூறியதாவது:—

ஒரு காலத்தில் புலவர்கள் கூழுக்குப் பாடிகள் என அழைக்கப்பட்டனர். சிலர் பொருளுக்கும், புகழுக்கும் தமது திறமையைக் காண்பிக்கவும், பொழுது போக்கிற்காகவும் பாடிஞர்கள். ஆனுல் கலை கலைக்காக என்ற நிலையில் நின்று மாறி மக்களை வளப்படுத்த, உருப்படுத்த பாடியவர்கள் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறுர்கள்.

தன்னிலை மறந்து கிடந்த மக்களைத் தட்டி எழுப்ப பாரதி தோன்றினுர். இந்திய சுதந்திரத்திற்கு பாரதி தமிழகவுணர்வுக்கு பாரதிதாசன், பாக்கிஸ்தானுக்கு இக்பால். தமிழ் ஈழத்துக்கு காசி ஆனந்தன்.

ஆங்கில மோகத்தில் திளைத்திருந்த மேல் மட்டத்தோரையும், படிப்பறிவே இல்லாத பாமரரையும். தமிழையன்றி எதையுமே அறிந்திராத பண்டிதர் வகுப்பினரையும் — ஒன்றிணைக்க, எல்லோர்க்கும் புரியும் வண்ணம் எழுச்சி கொள்ள உணர, உணர்ச்சி கொள்ள கவிதை பாடியவன் பாரதி.

ஔவை எழுதிய ஆத்தி சூடியிருக்க — மக்களைத் தட்டியெழுப்பும் நோக்கோடு புதியதோர் ஆத்தி சூடியை பாரதி எழுதினுர், அதை அவர் "அச்சம் தவிர். ஆண்மை தவறேல்'' என்று தொடங்குவதிலிருந்தே புரிந்து கொள்ள முடியும்...

"உலகெல்லாம் பரந்து வாழுகிற அரேபியர்கள் தொகைதான் உலகத் தமிழர்களின் தொகை. ஆனுல் அரேபியர்களுக்கு ஐ. நா. சபையில் எத்தனையோ பிரதிநிதிகளுண்டு. தமிழர்களுக்காக ஒரு பிரதிநிதியாவது உண்டா? ஆறுகோடித் தமிழர்களுக்கும் உலகிலே ஒரு நாடில்லை என்ற நிலையை ஈழத்தமிழர்களாகிய நாம் மாற்றியமைப்போம்'' என்று கூறிமுடித்தார்.

### உதுமா லெவ்வை

தொடர்ந்துபேசிய ஜனுப் உதுமா லெப்பையவர்கள் கூறியதாவது:-

இந்தி—உருது—பாரசீகம்—ஆங்கிலம் ஆகிய பல மொழிகளில் பாடிய கவிஞர் இக்பால்.

"கோழைகள் வீரர்கள்
ஆவார்
இக்பாலின் கீதங்கள்
கேட்பின்''

எனக்கவிஞர்கள் பாடுமளவிற்கு உணர்ச்சி மிக்க விடுதலைக் கீதங்களைப் பாடியவர் அவர்—முஸ்லிம்களுக்கு தனி நாடு வேண்டும் என்று ஜின்னு சிந்திக்கும் முன்னரே பாக்கிஸ்தானைப்பற்றி கற்பனை பண்ணியவரா இக்பால்.

அவரது சிந்தனைகள் ஜின்னுவால் முன்பு கேலி செய்யப்பட்டாலும் பின்பு அவருக்கு முன்னேடியாக அமைந்தன. இஸ்லாமிய இளைஞனைத் தட்டி எழுப்பும் கீதங்களையே பாடினுர்.

இஸ்லாமிய இளைஞனே!
கப்பலைச் செலுத்த
வேண்டியது உன்பொறுப்பு, இளைப்பாறுவதற்கு
எங்கே நேரமிருக்கிறது.

என்று பாடினுர். அவர் அக்கவிஞன் ஊட்டிய விடுதலை உணர்ச்சி வழியில் நாமும் நின்று தமிழ் ஈழத்தைப்பெறுவோம். என்ருர்.

### மங்கையர்க்கரசி

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் 'காசி ஆனந்தன்' பற்றிப் பேசுகையில் கூறியதாவது:-

"தூங்கிக் கிடந்த ஈழத் தமிழர்களை தட்டியெழுப்பி ஆண்டபரம்பரை மீண்டும் ஆளவேண்டும் என்ற உணர்ச்சியை ஏற்படுத்தியவர் காசி ஆனந்தன். பாடிப்போட்டு சும்மா இருக்காது — தான் பாடிய படியே வாழ்ந்து காட்டி தமிழ் சமுதாயமாக, தன்னையும் தன் குடும்பத்தையும் அழித்துக்கொள்ளும் மெழுகுவர்த்தியாக, ஊதுபத்தியாக, தியாகவிளக்காக விளங்குகிறுர் காசி ஆனந்தன். அவரது பாடல்கள் தமிழ் ஈழவிடுதலைப் போரின் சுட்டிமுனைகளாகும். காசி ஆனந்தன் கண்டகனவு நிறைவேற நாமனைவரும் உழைப்போம்'' என்ருர்.

(தொகுப்பு: நாவண்ணன்)

---

# தமிழர் அடக்கியாளப்பட்டால் கம்யூனிஸ்ட் கட்சி போராடுமாம்! 75 வயதுப்'பெரியவர்' யாழ்ப்பாணத்தில் பொது மக்களைப் 'பேய்க்'காட்டினுர்

தமிழர் சிங்கள மக்களால் அடக்கியாளப்பட்டால் கம்யூனிஸ்ட் கட்சி போராடும் என்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த தனது 75-வது பிறந்த நாள் விழாவிலே, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா கூறினுராம்!

இச்செய்தியை பத்திரிகையில் படித்தபோது சிரிப்புத்தான் வந்தது.

இலங்கைத் தமிழர்கள் எதற்காகப் போராடுகிறுர்கள் என்று தெரியாதவர் போல், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கூடியிருந்த மக்களைப் 'பேய்காட்டி' இருக்கிறுர் இந்தப் பெரியவர்; கம்யூனிஸ்ட் தலைவரான இவரது அரசியல் அறிவு இவ்வளவுதானு அல்லது யாழ்ப்பாணத்து மக்களைப் பேய்க்காட்டலாம் என்ற அரசியல் 'தந்திரம்' படித்தவரா?

இவருடைய கூற்றுப்படி, இப்பொழுது தமிழர்கள் அடக்கியாளப்படவில்லையா? இவர் எங்கேயிருந்து வந்தவர்? இலங்கை அரசியலை மறந்து போனுரோ? யாழ். மக்கள் அளித்த அன்பான வரவேற்பினுல் மகிழ்ந்து, தனது கட்சி தமிழர்களுக்காகப் போராடும் என்ற பொன்மொழியை — வாக்குறுதியை — அளித்த கம்யூனிஸ்ட் தோழருக்கு—

அவர் சார்ந்துள்ள அரசாங்கம், நீதித்துறையில் புரட்சிகரமான மாற்றங்களை செய்கிறேம் என்று சொல்லிக்கொண்டு, தமிழ் இளைஞர்களை விசாரணையின்றி, ஆண்டுக்கணக்காக சிறைகளில் அடைத்து வைத்து, துன்புறுத்துவதும்,—

தமிழ்ப் பகுதிகளில்தரைப் படையினரும், ஊர்காவலரும் கடற்படையினரும், தாம் நினைத்தபடி, வெற்றியாட்டமாடுவதும்,—

தரப்படுத்தலால், தமிழ் மாணவரை, பல்கலைக்கழகப் படிப்பை அணுக முடியாமல் செய்வதும்,—

ஒரே மொழி மூலம், அரசாங்க சேவையில் சேர்ந்த தமிழர்களை அரசகரும மொழி படித்தால்தான் உயர்வு என்ற நிபந்தனை விதித்து வாட்டுவதும்,—

தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், பௌத்தர்களில்லாத இடங்களில் எல்லாம் புத்த கோவில்கள் அமைப்பதும், தமிழ்க் குடிகளைத் துன்புறுத்துவதும், தமிழ் விவசாயி நிலமின்றித் தவிக்கும்போது அவ்விடத்தே, சிங்கள விவசாயியை அமர்த்துவதும்,—

தமிழ்ப்பகுதி ஆஸ்பத்திரிகளில் பல குறைகள் இருந்தாலும்; அவற்றை நிவர்த்தி செய்யாது, தமிழ் மக்களின் வசதிகளைப் பேணுது பாராமுகமாயிருப்பதும்,—

பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றப் பிரதிநிதிகளைப் புறக்கணித்துவிட்டு, ஆளும் கட்சிக்கு ஆமா போடும் தோழர்கள் மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தை உடைக்க, அவர்களின் ஒற்றுமையை குலைக்கச் சதி செய்வதும்,—

அடக்கு முறைகள் இல்லையா?

தமிழன் வாழ்வில் ஒவ்வொரு கணமும் கலக்கமும், கவலையும், வீழ்ச்சியும், கொண்ட காலமாகக் கழிவது, இந்த கம்யூனிஸ்ட் தலைவருக்குத் தெரியாதென்ருல், அவர் தோழர்களாக யாழ்ப்பாணத்தில் இருக்கும் 'தீவிர வாதி'கள், இவற்றை எடுத்துச்சொல்லி விளக்கியிருக்கலாமே.

இந்த அழகில்தான், எமது 'தோழர்கள் சொல்கிருர்

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியல் மேடை

**அன்பு நண்பா,**

முதலாளித்துவ அடிவருடிகள்—
ஏகாதிபத்தியத்தின் எச்ச சொச்சங்கள்—
சுரண்டல் வர்க்கத்தின் சொந்தக்காரர்கள்—
பிற்போக்குவாதிகள்—
பூஷ்வாக்கள்—

இப்படி நம்மைப் பார்த்து—ஒரு தேசிய இனத்தின் நியாயபூர்வமான உரிமைக்கும் விடுதலைக்கும் போராடிவரும் தமிழர் கூட்டணியைப் பார்த்து—ஏளனங்கள் இழிமொழிகள், ஏச்சுப் பேச்சுக்கள் நாள்தோறும் பெய்து வரும் கும்பலை—இந்நாட்டு 'முற்போக்காளர்' எனத் தமக்குத்தாமே பட்டம் சூட்டிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளை நீ நன்கு அறிவாய்! 'காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ' என்று புரட்சிக் கவிஞர் கேட்டது போன்று—யார் என்ன கூறினலும், எவர் நம்மை இழித்துரைத்தாலும்—உண்மையான சோசலிசத்தின் வெற்றிக்காக — மாமேதை லெனின், ஸ்டாலின், கார்ள்மார்க்ஸ்போன்ற உலகப் பெருந்தலைவர்கள் வகுத்தளித்திட்ட சோசலிசக் கோட்பாடுகளின் வழி பிசகாமல் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கு நாம் உரிமைக் குரல் எழுப்பி வருகிறோம்—போர்க்களத்திலே நின்று கொண்டிருக்கிறோம்;

இந்நாட்டில் தம்மை முற்போக்குவாதிகள் என்று அழைத்துக் கொள்வோர்—அதாவது கம்யூனிஸ்டுகளும் சமசமாஜிகளும்—பெரும்பான்மை இனத்தின் பூர்ஷ்வா மனப்பான்மையை, இன மொழி ஆதிக்கவெறியை எதிர்த்துப்போராடத் தெம்பின்றி திராணியின்றி அவர்களது ஆக்கிரமிப்பு தேசியத்திற்கு (aggressive nationalism) தலை வணங்கி அதை ஏற்றுக் கொண்டு விட்டார்கள்!

"தமிழர் கூட்டணியும் சோசலிசக் கருத்தையே வலியுறுத்திவருகிறது!"

என்று அவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். சொன்னவர் யார் என்கிறாய்? சாட்சாத் அமைச்சர் குமாரசூரியர் தான்! (ஆதாரம் ஈழநாடு 18. 4. 76) தமிழர் கூட்டணி சோசலிசத்தின் பரம விரோதி — பிற்போக்கு கும்பல் — ஏகாதிபத்திய ஏஜண்டுகள்—என்று கூறித்திரிந்தவருக்கு தமிழர் கூட்டணியும் சோசலிசக் கருத்துக்களையே வலியுறுத்தி வருகிறது என்ற உண்மை இப்போதுதான்—இத்தனை காலங்கடந்துதான் தெரியவந்திருக்கிறது. காரிருளால் சூரியனை நீண்டகாலத்துக்கு மறைக்க முடியாதது போலவே தமிழர் கூட்டணியின் கருத்துக்களை மேலும் மூடி மறைக்க முடியாத நிலையில் குமாரசூரியர் தமிழர் கூட்டணியும் ஒரு சோசலிசக் கட்சி தான் என்பதை இப்போது பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்!

சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசுடன் சேர்ந்து சோசலிசத்தை உருவாக்க உழைக்கவேண்டுமாம்—அரசுடன் சேர்ந்துகொள்வதால் தமிழர் கூட்டணி தனது அடிப்படைக் கொள்கைகளை கைவிட்டுவிட வேண்டியதில்லையாம் — இதுவும் குமாரசூரியரின் இதோபதேசம்!

நண்பா, குமாரசூரியருக்கு ஒன்று சொல்வோம்—உங்களுடன் சேர்ந்து எமது தூய்மையான சோசலிசக் கருத்துக்கு 'சேறு' பூசிக் கொள்ள ஒரு போதுமே நாம் தயாராக இல்லை; எங்கள் இலட்சியம் நிறைவேறுகிற பொழுது உலகிற்கே ஒரு எடுத்துக் காட்டாக சமதர்மம் சூலுங்கும் சோசலிச பூமியாக தமிழ் ஈழத்தை ஆக்கிக் காட்டுவோம்—எங்கள் சோசலிசக் கருத்துக்களை அப்போது செயற்படுத்திக் காட்டுவோம்—கண்டுகொள்ளுங்கள்! சமசமாஜக்கட்சியை உள்ளே இழுத்து அதைப் பிழிந்து சாற்றையெடுத்துக் கொண்டு இன்று சக்கையை வெளியே வீசிவிட்டீர்கள்—அதுபோல தமிழர் கூட்டணியையும் எண்ணினல், நீங்கள் ஏமாந்து போவீர்கள் என்பதைத்தான் குமாரசூரியருக்கு கூறி வைக்க முடியும்!

"ஆங்கிலேயத் தொழிலாளர்களுக்கு நாம் என்ன சொல்வது? என்னுடைய கருத்தில் (அயர்லாந்து—இங்கிலாந்து) இணைப்பை ரத்து செய்வதாக அறிவிக்கவேண்டும். ஆங்கிலேய (தொழிலாளர்) கட்சித் திட்டத்திலேயே இதைச்சேர்த்துக்கொள்ளவேண்டும்.

"அயர்லாந்துக்கு இன்று என்ன தேவைப்படுகிறதென்ருல் (1) இங்கிலாந்திலிருந்து விடுபட்டு சுதந்திரமான தனியாட்சி, (2) ஒரு விவசாயப் புரட்சி (3) இங்கிலாந்திற்கு எதிரான இறக்குமதி ஏற்றுமதி காப்புவரிகள்."

இப்படிக் கூறிய கார்ல் மார்க்ஸ், நீண்ட காலத்திற்குப் பிறகு தனது மனத்திலிருந்த கருத்தொன்றையும் வெளியிடுகிருர். — அதாவது இங்கிலாந்து ஆட்சியை தொழிலாள வர்க்கம் பிடித்துக்கொண்டால், அயர்லாந்து மக்களுக்கு நியாயம் கிடைக்கும் என்று அவர் அதுவரை எண்ணிவந்தாராம், அது தவருனது என்பதை அவரே பின்னர் உணர்ந்து இவ்வாறு எழுதுகிருர்:—

"இந்தப் பிரச்சினைபற்றி நான் மேலும் ஆழமாகச் சிந்தித்த போது இதற்கு நேர் மாருன கருத்து என் மனதில் ஏற்பட்டது. அயர்லாந்தை விட்டுவிலகாமல் ஆங்கிலேய தொழிலாளவர்க்கம் எதனையும் சாதிக்க முடியாது!"

இதுமட்டுமல்ல — அவர் மேலும் கூறுகிருர்:—

"பிரிவினை கேட்கும் தொழிலாளியைப் பார்த்து ஆளும் இனத்தைச் சேர்ந்த தொழிலாளி "போட்டித் தொழிலாளி" என்று நினைக்கிருன். அத்தோடு தான் ஆளும் தேசத்தின் உறுப்பினன் என்றும் நினைக்கிருன். பிரிவினை கேட்போருக்கு எதிராக சமய—சமூக—தேசிய பகைமைகளை வாஞ்சையோடு வளர்க்கிருன்.

ஆனல் பிரிவினை கேட்பவர்கள் ஆளும் தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களைப்பற்றி என்ன நினைக்கிருர்கள்? ஏகாதிபத்தியத்தின் கையாள், ஏகாதிபத்தியத்தின் முட்டாள் தனமான கருவி என்றெல்லாம் நினைக்கிருர்கள்."

# போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும்!

பொதுத்தேர்தலில் வெற்றிபெறுவதற்கு ஒரே வழி பெரும்பான்மை இனத்தின் ஆக்கிரமிப்பு தேசியத்தை தாங்களும் ஏற்றுக்கொள்வதே என்கிற முடிவை இந்நாட்டின் "சோசலிசக் கட்சிகள்" என்று கூறப்படும் கட்சிகள் ஏற்றுக்கொண்டு பல ஆண்டுகளாகி விட்டன; சிங்களத் தலைவர்களிடையேயுள்ள 'பூர்ஷ்வாக்கள்' கிளப்பிவிட்ட பௌத்த மதவெறி தனிச்சிங்களமொழிவெறி ஆகியவற்றுக்குள் முற்ருக மூழ்கிப்போன கம்யூனிஸ்டுகளும் ஏனைய முற்போக்குப்பேசுவோரும் — தடம் புரளாமல் சோசலிச வழி பிசகாமல்—சிங்கள இனத்தின் "பூர்ஷ்வா" மனப்பான்மையை எதிர்த்தும் அதே நேரத்தில் சோசலிச சித்தாந்தத்தை உருவாக்கிய பெருந்தலைவர்கள் வகுத்துச் சென்ற கொள்கைகளின் அடிப்படையில் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்காக குரலெழுப்பியும் வரும் நம்மைப்பார்த்து—தமிழர் கூட்டணியைப் பார்த்து — ஏகாதிபத்தியவாதிகள் பிற்போக்குவாதிகள் என்றெல்லாம் வசைமாரி பொழிந்து திரிகிருர்கள்!

வெறும் சுயநலத்துக்காக 'இனமொழிசமத்துவம்' என்கிற சோசலிசக் குறிக்கோளை காற்றில் பறக்கவிட்ட இவர்கள்தான் — இலட்சியத்துக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கும் நம்மைப் பார்த்து கேலி செய்கிருர்கள்; புதிய கறுப்பு ஏகாதிபத்தியம் ஒன்று இந்நாட்டில் தலையெடுப்பதற்கு கைகொடுத்து உதவி செய்யும் இவர்கள்தான் ஏகாதிபத்தியம் எந்த வடிவத்தில் வந்தாலும் அதை நாம் ஏற்க மாட்டோம் என்று முழங்கிடும் நம்மைப்பார்த்து எக்கலி கொட்டுகிருர்கள்; காலனித்துவத்தை எதிர்ப்பதாக கூறும் இவர்கள்தான், இங்கு தமிழ் ஈழத்தில் புதிய காலனி ஆட்சி நடத்துவோருக்கு 'சாமரம்' வீசுகிருர்கள்!

இப்படிப்பட்டவர்கள் மத்தியிலேயிருந்து —நேற்றுவரை சோசலிசத்தின் எதிரிகள், ஏகாதிபத்தியத்தின் எச்சசொச்சங்கள் என்று நம்மைத் திட்டிய ஒருவரின் வாயிலிருந்து—இப்போது நம்மைப்பற்றி ஒரு நல்ல வார்த்தை வெளிவந்திருக்கிறது!

நண்பா, சிலருக்கு ஒரு சந்தேகம்—நாட்டுப்பிரிவினை கேட்கிறவர்கள் எப்படிசோசலிசவாதிகளாகமுடியும்? சோசலிசம் பிரிவினைக்கு அனுசரணையாக இருக்கிறதா என்றெல்லாம் கேட்கிருர்கள்!

இதுபற்றிய சந்தேகத்தை அயர்லாந்து விடுதலைப் போராட்டத்தின்போது தீர்த்து வைத்திருக்கிருர் சோசலிசத்தின் தந்தை கார்ள் மார்க்ஸ். ஒரு தேசிய இனம் விடுதலைக்காகப் போராடும்போது சோசலிஸ்டுகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் அவர் அப்போதே எடுத்துக் காட்டியிருக்கிருர்!

இங்கிலாந்திலிருந்து பிரிவதற்காக அயர்லாந்துநடத்திய பிரிவினைஇயக்கத்தை கம்யூனிசப்பேராசான் கார்ள் மாக்ஸ் முழுக்க முழுக்க ஆதரித்தார்; ஆதரித்துஆங்கில நாட்டு செய்தி இதழ்களில் அன்று கட்டுரையும் எழுதினர்!

'டெர் சோசல்டெமோகிரட்', 'லோ இன்டர் நாஷனல்' போன்ற ஏடுகளில் கார்ள் மார்க்சும், பிரெடரிக் ஏங்கல்சும் அயர்லாந்தின் பிரிவினையை ஆதரித்து எழுதினர்கள். ஆதரித்து எழுதியது மட்டுமன்று, மார்க்ஸ், அயர்லாந்து பிரிவினையில் துடிப்பே காட்டினர்! எப்படியாவது அயர்லாந்து தனி நாடாகிட வேண்டுமென்று நினைத்தார் மார்க்ஸ். அவரையும் விட ஒருபடி தீவிரமாகச்சென்ருர் அவரது நண்பரான ஏங்கல்ஸ்!

அயர்லாந்து முழுவதும் பயணம் செய்த ஏங்கல்ஸ் அந்தப் பயணமுடிவில் தமது கைப்பட மார்க்சுக்கு மடல் எழுதினர்! அந்த மடலில், அயர்லாந்து மக்களுக்குத் தாங்கள் அயர்லாந்து நாட்டை சேர்ந்தவர்கள் என்ற தேசிய இனவெறி ஏற்பட்டிருக்கிறது; தங்கள் சொந்த நாட்டில் வாழவில்லை யென்று அவர்கள் நினைக்கிருர்கள்!" என்று குறிப்பிடுகிருர்! (இந்த உணர்ச்சி தான் ஈழத் தமிழனுக்கும் இன்று ஏற்பட்டுள்ளது.)

ஏங்கல்ஸின் மடலுக்கு கார்ள் மார்க்ஸ் பின்வருமாறு பதில் எழுதினர்:

இவ்வாறு கூறும் கார்ள் மார்க்சின் தத்துவம்தான் என்ன? ஒரு தேசிய இனம் பிரிவினை கேட்கிறபோது—அந்த இனத்தை ஆள்கிற இனத்தைச்சேர்ந்த தொழிலாளவர்க்கம் பிரிவினைக்கு ஆதரவாக இருக்கவேண்டும். இதைத்தான்—அயர்லாந்து—இங்கிலாந்து பிரிவினையின்போது கார்ள் மார்க்ஸ் இடித்துக் காட்டினர்; எடுத்துரைத்தார்!

இங்கோ—தமிழ்தேசிய இனத்தின்கோரிக்கைக்கு ஆதரவாக இருக்கவேண்டிய மார்க்சியவாதிகளும் கம்யூனிஸ்டுகளும், தமிழினத்தை ஒழித்துக்கட்டும் திட்டங்களுக்கு கத்தி தீட்டிக்கொடுக்கிருர்கள்!

தமிழ்தேசிய இனத்தைப்பொறுத்தவரை நாம்தான், தமிழ்ஈழத்தின் உண்மையானகம்யூனிஸ்டுகளாக — உண்மையான மார்க்சிஸ்டுகளாக இன்று இலட்சியயாத்திரையை மேற்கொண்டிருக்கிறோம். அதனல்தான் போலித்தனமான கம்யூனிஸ்டுகளும் மார்க்சிஸ்டுகளும் தமிழ் ஈழத்தில் இதுநாள் வரை தலையெடுக்க முடியவில்லை!

எனவே நண்பா, நாம் செல்லுகின்ற பாதை கார்ள் மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் போன்ற சோசலிச, கம்யூனிசப் பிதாமகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதை! அந்தப் பாதையில் தலை நிமிர்ந்து செல்லுவோம்! போற்றுவார் பற்றியும் தூற்றுவார் பற்றியும் நமக்கு கவலையில்லை! இந்த உணர்வுடன் 'மே' திருநாளை தமிழ் தேசிய உணர்ச்சி விழாவாக—அடக்குமுறையையும், ஆதிக்கவெறியையும் எதிர்க்கின்ற துணிவுக்கு வலுவூட்டும் விழாவாக கொண்டாடுவோம்!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

### உறவு வளரட்டும் ஒற்றுமை ஓங்கட்டும்

'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு — நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு' என்று இடித்துரைத்தான் பாரதி. ஒற்றுமையின் அவசியத்தையும் பலத்தையும் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் இப்போது உணர்ந்து வருவது கண்டு நம் நெஞ்சம் பூரிக்கிறது.

இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் நெல்லிக்காய் மூடைகள் போல சிதறிச் சின்னபின்னப்பட்டு சீரழிந்து போகாமல்—ஓரணியில் ஒற்றுமையாய் ஒன்று திரண்டு நிற்கவேண்டும் என்கிற கருத்தை சுதந்திரன் தொடங்கப்பட்டகாலத்திலிருந்தே ஆணித்தரமாக எடுத்துக் கூறிவந்திருக்கிறோம்; தமிழ் பேசும் மக்களை இணைக்கும் பணியில் முழு மூச்சுடன் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக உழைத்துக்கொண்டும் வந்திருக்கிறோம்.

தமிழ் பேசும் மக்கள் ஒரேயணியில் ஒன்று பட்டுவிட்டால், அவர்களை ஏறிமிதித்து, நசுக்கி அழித்துவிட முயலும் நச்செண்ணம் படைத்தோர் திட்டம் தூள் தூளாகிவிடும்; தன்மானத்துடன், நமது சுதந்திரத்தையும் உரிமைகளையும் பேணிப்பாதுகாத்து இந்நாட்டில் தலை நிமிர்ந்து வாழ்ந்திட ஒற்றுமையே நமது ஜீவசக்தியாக திகழ்ந்திடவேண்டும் என்பதை எடுத்துக் கூறி வந்தோம்.

தமிழ் பேசும் மக்களை ஒரேயணியில்—ஒரே தலைமையின் கீழ்—ஒரே இலட்சியத்தின் கீழ் ஒன்று படுத்த வேண்டும் என்ற நமது தூய்மையான நோக்கம் 1956ம் ஆண்டிலிருந்து நூற்றுக்கு அறுபது வீதம் வெற்றி பெற்றது; ஆம், தந்தை செல்வாவின் தலைமையில் 1956ம் ஆண்டு ஏற்பட்ட தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை, மேலும் விரிவடைந்து, மகோன்னதமான வளர்ச்சியடைந்து, 1972ம் ஆண்டு தமிழர் கூட்டணியாக பரிணமித்து அனைவரையும் மகிழ்ச்சியடையவும், எழுச்சிகொள்ளவும் வைத்தது.

தமிழர் கூட்டணி தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட அணியாக உருவாகியபோதிலும் — மதத்தால் இஸ்லாமியராக இருந்தும் இனத்தாலும், பேசும் மொழியாலும் தமிழர்களாகவே வாழும் முஸ்லிம்களுக்கும் ஏனைய தமிழர்களுக்குமிடையே போதிய அளவு ஒற்றுமையும் உறவும் ஏற்படாமலிருந்தது நமக்கு பெருங்கவலையை அளிப்பதாகவேயிருந்து வந்தது.

ஆனால், ஒற்றுமையின் உயர்வையும், பலத்தையும் காலம் இன்று இஸ்லாமியர்களுக்கும் ஏனைய தமிழர்களுக்கும் உணர்த்தி, தமிழர்—முஸ்லிம்கள் ஒற்றுமையை இறுக்கமடையச் செய்து வருவது கண்டு உள்ளம் பூரிக்கிறோம். தமிழர்களையும், முஸ்லிம்களையும் இணைக்கக் கூடிய வாய்ப்புக்களையும் சூழ்நிலைகளையும் இறைவனே இன்று ஏற்படுத்திக்கொடுத்து வருகிறான்!

வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களை குடைந்து, அங்கு தனிச் சிங்கள நீதிமன்றங்களை உருவாக்கும் பீலிக்சின் திட்டமே—முதன் முதலாக தமிழர்—முஸ்லிம் ஒற்றுமைக்கு வித்திட்டது; நீதிமன்ற மொழியுரிமையை—தமிழுரிமையை—காப்பதற்கு தந்தை செல்வாவை தலைவராகவும், முஸ்லிம் பெருந்தலைவர் டாக்டர் கலீல் அவர்களை துணைத்தலைவராகவும் கொண்டு உருவான முஸ்லிம் தமிழர் கூட்டணி, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலங்கள் பறிபோவதை தடுத்து நிறுத்துவது பற்றியும் ஆராய்ந்து வருகிறது.

இதே சமயத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த திட்டமிட்ட ஓர் பெருங்கொடுமையை கண்டித்து தந்தை செல்வா அவர்கள் உடனடியாக உருப்படியான, நடவடிக்கையொன்றை மேற் கொண்டார்.

அதன் பின்னர் அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற தந்தை செல்வாவின் பிறந்த நாட் பெருவிழாவுக்கு முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் கலீல் தம்முடைய குடும்ப சகிதம் சென்று தந்தையை வாழ்த்திப் பேசிய பேச்சு நெஞ்சில் கிளுகிளுப்பை யூட்டக்கூடியதாக அமைந்திருக்கின்றது.

முஸ்லிம் மக்களின் தாய்மொழி தமிழேதான் என்பதை வலியுறுத்திய டாக்டர் கலீல், தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தால், ஒரு தீங்கும் வராதென்றும், தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்மென்றும் மிக ஆணித்தரமாக வலியுறுத்தியிருக்கிறார்.

டாக்டர் கலீலின் கருத்தை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை வரவேற்கும் நாம், இத்தகைய உறவும் ஒற்றுமையும் மேலும் பலமடையவும் இறுக்கமாக வளரவும் அவரைப் போன்றோர் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்—முஸ்லிம் உறவு மேலும் நெருக்கமடைவதற்கு உதவுவதாக அமைந்திருக்கிறது அண்மையில் அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தினர் தடுப்புக்காவல் சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்கள் சம்பந்தமாக நிறைவேற்றியுள்ள தீர்மானம்!

# சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களுக்காக குரல்கொடுக்கிறார்கள் இஸ்லாமிய ஆசிரியர்கள்!

இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்கள் மதத்தினால் வேறுபட்டவர்களாக இருந்தபோதிலும், இனத்தினாலும் மொழியினாலும் ஒருவரேயென்பதை உணர்த்தும் வகையில்—சிறையில் நீதிவிசாரணையின்றி அநியாயமாக அடைத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்காக குரலெழுப்பியிருக்கின்றனர் இஸ்லாமிய ஆசிரியசங்கத்தினர். சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களை அரசு நீதிவிசாரணைக்குட்படுத்த வேண்டும் இன்றேல் அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று அரசுக்கு இடித்துக்கூறியிருக்கின்றனர் அவர்கள்.

தடுப்புக்காவல் சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்கள் சம்பந்தமான பிரச்சினையை அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது, கொழும்பு அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் மத்திய நிர்வாக சபைக்கூட்டத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஒரு தனிப் பிரேரணையாகக் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் கொழும்பு வடக்கு கிளையின் தலைவரும் வேலேகொட முஸ்லிம் வித்தியாலய அதிபருமான ஜனாப். எம். எம். ரஸீன், களுத்துறை கிளையைச்சேர்ந்த ஜனாப் ஏ. இக்பால், ஆகியோர் தமிழ் இளைஞர் சம்பந்தப்பட்ட பிரேரணை, சங்க மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கூட்டாக சமர்ப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இப் பிரேரணை ஆராயப்பட்டபோது கருத்துத் தெரிவித்த இஸ்லாமிய ஆசிரியர்கள் பலரும், வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் மேலும் காலதாமதமின்றி விசாரணைக் குட்படுத்தப்படவேண்டுமென்றும், அவர்கள் குற்றவாளிகளாக காணப்பட்டால் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டும். அன்றேல் உடனடியாக விடுதலைசெய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இறுதியில் மேற்கண்டவாறு பிரதமரையும் அரசையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

ஆளுங்கட்சியிடம் மண்டியிட்டு, அவர்கள் தரும் அற்ப பிச்சைக்காக, சொந்த இனத்து இளைஞர்களையே காட்டிக்கொடுத்து, பொலிசிடம் பொய் முறைப்பாடு கொடுத்து—சிறைக்குள் தன்னிவரும் அடிவருடித் தமிழர்கள் மீது காறியுமிழக்கூடிய முறையில், சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்காக துணிவுடன் வாதாட முன்வந்த இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தினரை நெஞ்சம் குளிர பாராட்டுகிறோம்!

தமிழர்—முஸ்லிம்கள் உறவு மேலும் நெருக்கமும், இறுக்கமும் அடைவதற்கு இந்தத்தீர்மானமும் ஒரு படிக்கட்டாக அமைகிறது.

ஆம், உறவை வளர்ப்போம்—உரிமை பெறுவோம் என்பதே தமிழர்—இஸ்லாமியர்களின் ஒரே கோஷமாகட்டும்!

## தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை வளர்கிறது!

## ஆத்மீகத் துறைக்கு ஒரு பேரிழப்பு!

பிரபல ஆத்மீகப்பெரியாரும் 'ஆத்மஜோதி' ஸ்தாபகரும், அதன் முன்னாள் ஆசிரியரும் 'டிவிஜஸ் டைஜஸ்ட்' என்ற ஆங்கில ஆத்மீக இதழின் ஆசிரியருமான பெரியார் திரு. க. இராமச்சந்திரா அவர்களது மறைவு ஆத்மீகத்துறைக்கு ஈடிணையற்ற பாரிய நட்டமாகும்.

82 வயதுடைய இப்பெரியார், தமது பேச்சாலும், எழுத்தாலும் ஆத்மீகக் கருத்துக்களை பரப்பி வந்தார். டோக்கியோ, பேர்லின், நோர்வே, அமெரிக்கா, உட்பட பலவெளிநாடுகளுக்கெல்லாம் சென்று, அங்குள்ள பல்கலைக்கழகங்களில் உரை நிகழ்த்தி இந்து சமயத்தத்துவங்களை பரப்புவதற்காக முன்னின்றுழைத்தவர். மகாத்மா காந்தியடிகள், நேருஜி, ஆகியோரை தமிழ் ஈழத்துக்கு 1929ம் ஆண்டிலேயே அழைத்தபெருமை இவருக்குரியது. பொலிஸ் அதிபர் திரு சுந்தரலிங்கம், கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் பரராசசிங்கம் ஆகியோர் இவரது மக்களாவர்.

## ஆபீஸ்பையன் சொல்கிறான்!

"தமிழர் கூட்டணி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்தால்தான் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெற முடியுமென்று பிதற்றியிருக்கிறார் நம்மட குமாரசூரியர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு சிங்கள மக்களிடம் எவ்வளவுதூரம் 'நல்லெண்ணம்' இருக்கிறதென்பதுதான் ஜாஎல இடைத்தேர்தலோடு வெட்ட வெளிச்சமாகிப் போச்சே! தான் போக வழி தெரியாத மூஞ்சூறு போல சுதந்திரக்கட்சியே தடுமாறுகிறது. இதில குமாரசூரியரு வேறு 'கப்ஸா' விடுகிறாரே" — என்கிறான் நம் ஆபீஸ் பையன்!

## மட்டுநகரில் தமிழ் இளைஞர்கள் கைது!

கல்லடி தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த மைக்கல் என்றவாலிபரைக் கைது செய்யச் சென்ற பொலிசார் தாக்கப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்பில் ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கணபதிப்பிள்ளை ரமணன், தர்மலிங்கம் பரந்தாமன், மயில்வாகனம் வேதநாயகம், பொன்னையா செல்வராசா, பேரின்பசாமி குமரேசன் என்ற வாலிபர்களே கைதுசெய்யப்பட்டோராவர். இவர்களை மே 7ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனைய நாட்டு தொழிலாளருக்கு இருக்கின்ற உரிமைகள் தமிழ்த் தொழிலாளர்களுக்கும் கிடைக்க அயராது பாடுபடுவோம்

## செயலாளர் நாயகத்தின் 'மே' நாள் செய்தி!

**மேதினி எங்கும் கொண்டாடப்படும் உலகத்தொழிலாளர் தினமான இம்'மே' திருநாளில் உலகப்பாட்டாளி வர்க்கத்துக்கும் — தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கும் தமிழர் கூட்டணியின் சார்பில் இதய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்!**

**பலர் உழைத்திட, ஒரு சிலர் அந்த உழைப்பை உண்டுகளித்திருப்பதைக் கண்டு, வெகுண்டெழுந்த தொழிலாள வர்க்கம், தனது பச்சை இரத்தத்தைக் கொட்டி —உயிர்களைப் பலி தந்து—எலும்புகளை முறித்துக் கொடுத்து—உழைப்பவனின் உரிமையை நிலை நாட்டிய திருநாள்தான் 'மே' நாள்!**

அடக்குமுறையும், அதிகார வெறியும், ஆணவப் போக்கும் ஆதிக்கத் திமிரும் பொடிப்பொடியாகிப் போன நாள்தான் 'மே' நாள்!

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் வீணில்
உண்டு களித்திருப் போரை
நிந்தனை செய்வோம்!"

என்று பாரதி பாடியது போன்று தமிழன் கண்ட உலகப்பெரும் உழவர் தினமதை முதல் நாள்—சிக்காகோ தொழிலாள வர்க்கம் தனது தியாகஇரத்தத்தினால் கண்ட உலகத்தொழிலாளர் திருநாள் 'மே' முதல் நாள்!

உலகத்தொழிலாளர்களே ஒன்று படுங்கள் என்ற குரல் இன்று எங்கும் எழுப்பப் படுகிறது!

உலகத்தொழிலாளர் அணியில் ஒன்றுபடுவதற்கு முன் ஈழத் தமிழ்பேசும் தொழிலாள வர்க்கம் முதலில் ஒன்றுபட்டு தன்னுடைய சுதந்திரத்தையும், உரிமையையும் நிலைநாட்டிக் கொள்ளவேண்டும்!

உலகத்தொழிலாளவர்க்கத்தில் மிகவும்கடைகெட்ட நிலையில்—நாயினும் கீழோராய் இன்று நடத்தப் படுபவர்கள் ஈழத்தமிழ் பேசும் தொழிலாளர்கள்தான்!

அதுவும் இன அடிப்படையில் தொழிலாளர்கள் ஒதுக்கப்படுவதும், அவர்களது உரிமைகள் பறிக்கப்படுவதும் போன்ற காட்டுமிராண்டித்தனமான முறைகள் பின்பற்றப்படுவது இந்நாட்டிலேதான்!

இந்த நாட்டின் வளத்துக்காக தலைமுறை தலைமுறையாக உழைத்துழைத்து ஓடாகி உருக்குலைந்துபோன 15 இலட்சம் தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமை, குடியுரிமைபோன்ற அடிப்படை அரசியலுரிமைகள் பறிக்கப்பட்டது அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினால்தான்!

இன்று அரசுடைமையாக்கப்பட்டதோட்டங்களிலிருந்து அவர்கள் விரட்டப்படுவதும் — வீதியோரங்களில் அவர்கள் பசியால் நலிந்து பிச்சையெடுப்பதும் —பட்டினியால் பிணமாகிப் போவதும் — அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினால்தான்!

மலையகத்திலேயிருந்து வேலையும் பறிக்கப்பட்டு விரட்டப்படும் தோட்டத் தொழிலாளர் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே குடியேறும்போது வேட்டை நாய்களால் விரட்டப்படுவதும்—அடித்து நொறுக்கப் படுவதும் அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினால்தான்!

மலையகத்தில் துன்பத்தினால் வாடும் இந்தப் பத்து இலட்சம் தொழிலாளர்களும் சிங்களவர்களாக இருந்திருந்தால் இந்த நிலைமை அவர்களுக்கு நிச்சயமாக வந்திருக்க முடியாது!

இந்த நாட்டுக்கு வேண்டிய அந்நிய செலவாணியில் முக்கால் பங்கு தேவையை



உழைத்துக் கொடுக்கும் அந்த மக்கள் கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழியின்றி வாடுகிறார்கள்.

உலகிலே ஆகக் குறைந்த ஊதியம் பெறுவதும் மலைநாட்டுத்தோட்டத் தொழிலாளர்கள் தாம்!

காரணம்—ஒரே காரணம் அவர்கள் தமிழர்கள்! தமிழர்கள்! தமிழர்கள்!!

அரசாங்கத் துறைகளில்—கூட்டுத்தாபனங்களில் தமிழ் பேசும் ஊழியர்கள் பலர்—தொழிலாளர்கள் பலர்—வேலை பறிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள்!

இதற்குக்காரணம்—அவர்களது தாய்மொழி தமிழாகிப் போனதுதான்! சிங்கள [illegible] மொழியில் அவர்கள் புலமை பெற முடியாததுதான்!

சிங்கள ஊழியர்களுக்கு இல்லாத சுமைகள்—கஷ்டங்கள்—தமிழ் பேசும் ஊழியருக்கு எதிராக சுமத்தப்படுகின்றன!

ஆளும் வர்க்கத்தில் சிங்களத் தொழிலாளி ஆளப்படும் வர்க்கமாகத் தமிழ்த் தொழிலாளி!

ஆளும் இனமாக சிங்கள இனம் — ஆளப்படும் இனமாக தமிழ்த் தேசிய இனம்!

பொருளாதாரத் துறையிலே தமிழ் ஈழம் சுரண்டப்படுகிறது — வஞ்சிக்கப்படுகிறது — புறக்கணிக்கப்படுகிறது!

தமிழ்த் தொழிலாளிக்கு குடியிருக்க காணியில்லை—சிங்கள தொழிலாளி தமிழ் ஈழத்தில் திட்டமிட்டுக் குடியேற்றப்படுகிறான்!

இந்த நிலையை மாற்றியமைத்திடவே தமிழர் கூட்டணி போராடுகிறது!

தமிழ்த் தேசிய இனம் சுதந்திரம் பெறும் போது—தமிழ் பேசும் தொழிலாளர்களும் சுதந்திரம்பெறுவர்!

தமிழ் தேசிய இனம் நடத்தும் சுதந்திரப் போராட்டத்தில் இனத்தின் முதுகெலும்பான தமிழ் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் முக்கிய பங்குண்டு!

சுரண்டலும் சோம்பேறித்தனமும், சாதியும், தீண்டாமையும் — முதலாளித்துவமுமற்ற ஒரு சமதர்ம ஈழத்தை சோசலிச குடியரசை உருவாக்கி அதில் தொழிலாளர்கள், விவசாயிகள் அரசை உருவாக்குவோம்!

தமிழ் பேசும் தொழிலாளர்கள் உலகில் வேறு எந்த நாட்டுத் தொழிலாளவர்க்கத்துக்கும் தாழ்ந்தவர்கள்ல்ல என்ற நிலையை உருவாக்க உழைப்போம் என்ற உறுதியை இந்த மே நாளில் எடுப்போம்!

வாழ்க தமிழ் பேசும் தொழிலாளர்கள்!

வாழ்க உலகத் தொழிலாளர் [illegible]

## யாழகத்தில் 'மே' நாள் ஊர்....

—1-ம் பக்கத் தொடர்

யோகேஸ்வரனும், மாட்டு வண்டிகள் அணிக்கு திரு.வி. என். நவரெத்தினம் பா. உ. வும், துவிச்சக்கர வண்டிகள் அணிக்கு திரு. க. துரைரத்தினம் பா. உ.வும் உழவு இயந்திரங்கள் அணிக்கு திரு. தா. திருநாவுக்கரசுவும் பொறுப்பாக இருந்து வழி நடத்திச்செல்வர். ஏனைய கூட்டணித்தலைவர்கள் பலரும் இவ்வூர்வலத்தில் கலந்துகொள்வர்.

கோட்டை மைதானத்தில் இடம்பெறவிருக்கும் பகிரங்கப்பொதுக்கூட்டத்தில் முதறிஞர் தந்தைசெல்வா. தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் திரு. மு. சிவசிதம்பரம் சட்டத்தரணி. அடலேறு ஆலாலசுந்தரம் சட்டத்தரணி திரு. சே. மா. செல்லத்தம்பு பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரி பா. உ. திரு. க. துரைரத்தினம் பா. உ. திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன். இன்னும் மொழிவழித்தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் உரை நிகழ்த்துவர். இக்கூட்டத்திற்கு திரு. க. சோதிலிங்கம் அ. எ. ச. தலைவர் தலைமை தாங்குவார்.

பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக. வண்ணை கலைவாணர் குழுவினரின் 'செல்லாபிறந்திலரேல்' வில்லிசை இடம்பெறும்.

இப்பெருவிழாவில் அரசாங்க தொழிலாளர் சங்கம் அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கம், மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கம், துறைமுக வழிகாட்டி நிலைய அத்தியாவசியசேவை ஊழியர் சங்கம். அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம், தட்டெழுத்தாளர் சங்கம், தமிழ் தட்டெழுத்தாளர் சங்கம், துறைமுக நாவாய் இயக்குனர் கழகம், அகில இலங்கை ஆள்புல வேலைப்பகுதி தொழிலாளர் சங்கம், ஆகியன பங்கு கொள்கின்றன. விழாவை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் முன்னின்று நடத்துகிறது.

## மலையகத்தில்...

—1-ம் பக்கத் தொடர்

டுள்ளன. எங்கும் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிக்கிறது.

ஏப்ரல் 27ம் திகதி உடப்புசல்லாவை, ருகலைப்பகுதிகளில் விசா காலாவதியாகிவிட்ட இந்தியப் பிரஜாவுரிமைபெற்ற 54 தோட்டத் தொழிலாளர்களின் குடும்பத்தலைவர்கள் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திலிருந்து வந்திருந்த அதிகாரிகளால் திடீரென கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டுபோகப்பட்டுள்ளனர். இவர்கள் கொம்பனித்தெரு தடுப்புமுகாமில் அடைத்துவைக்கப்பட்டு நாடுகடத்தப்படுவார்களாம்.

இந்தத் திடீர் மனிதவேட்டையையடுத்து, இவர்களைப் பிரிந்த அவர்களது மனைவி மக்கள் மற்றும் உறவினர்களும் ஏனையோரும் செய்வதறியாது கண்ணீரும் கம்பலையுமாகவுள்ளனர். அதிகாரிகளின் இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கைக்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ள இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவர் திரு. அ. தங்கத்துரை பா.உ., உடுப்பிட்டி பா. உ., திரு. க. ஜெயக்கொடி, இ. தொ. காவைச் சேர்ந்த திரு. ஆறுமுகநாதன் ஆகியோர், இதனால் பாதிக்கப்பட்டு வேதனையிற் கண்ணீர் வடிக்கும் குடும்பங்களுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் தெரிவிக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தனர்.

திடீரெனக் கைதுசெய்யப்பட்டவர்களில் மிகப் பலர், மே மாதம் 30ம் திகதி சம்பளம் பெற்றுக்கொண்டு இந்தியா செல்லவிருந்தவர்களாம். அதற்கிடையில் அரசு அதிகாரிகள் இந்த வெறியாட்டத்தை நடத்தியுள்ளனர்.

அரசு அதிகாரிகளின் இந்த மிலேச்சத்தனமான செயல் மலையகத்தில் பெரும் குமுறலையும் கொந்தளிப்பையும் தோற்றுவித்துள்ளது. உடப்புசல்லாவையில் தனது 'மே' நாள் விழாவை கொண்டாட திட்டமிட்டிருந்த இ. தொ. கழகம், திடீரென ஏற்பட்ட புதிய சூழ்நிலையால் விழாவைக் கைவிடும் நிலையும் ஏற்பட்டுள்ளதாம்.

இந்தப் பிரச்சினையை தேசிய அரசுப் பேரவையில் திரு. க. ஜெயக்கொடி, அ. தங்கத்துரை ஆகியோர் விரைவில் எழுப்பவிருக்கின்றனர்.

### தமிழ்தொழிற்சங்க கூட்டணியின் ஆண்டுக்கூட்டம்!

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் ஆண்டுக் கூட்டம் எதிர்வரும் மே ஐந்தாம் திகதி புதன்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. 11 மொழிவழித் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்திற்கு திரு. த. நமசிவாயம் தலைமை வகிப்பார். திரு. சே. மா. செல்லத்தம்பு பா. உ, எம். எஸ். செல்லச்சாமி, மு. சிவசிதம்பரம், அ. தங்கத்துரை பா. உ. ஆகியோர் உரை நிகழ்த்துவிருக்கின்றனர்.

வீட்டுத் தூய்மைக்குச் சிறந்த வழி!
நுளம்பு, இலையான் தொல்லை நீங்க ஒரே வழி!
நீம் சுகாதார தூபம் பாவிப்பதே
ஒரு பைக்கற் -/25 சதம் மட்டுமே.
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே நாளின் தனிச்சிறப்பு!

ஈழவேந்தன்

"சிற்றூரும் வரம் பெடுத்த
வயலும் ஆறும்
தேக்கிய நல்வாய்க்காலும்
வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்
விளைக்கும்
நிறையுழைப்புத்
தோள்களெலாம்
எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து
கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்து தந்த
கைதான் யார்கை?
பொற்றுகளை கடல் முத்தை
மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய
மூச்செவரின் மூச்சு"

என்று கேள்விகளை அடுத்தடுத்து கேட்கும் புரட்சிக் கவிஞன்பாரதிதாசன் இவை அனைத்தையும் நிறைவேற்றுபவன் தொழிலாளிதான் என்று தொழிலாளியின் பெருமையைப் பேசுகிறான்.

## உழைப்பாளியின் பெருநாள்

இப்பெருமை மிக்க தொழிலாளியின் பெருநாளாக 'மே' நாள் விளங்குகிறது. உழவனின் பெருநாளாக தைப்பொங்கல் விளங்குகிறது. உழைப்பாளியின் பெருநாளாக 'மே' நாள் விளங்குகிறது. இம்'மே' நாள் எங்கு தோன்றியது, எப்பொது தோன்றியது என்பது அடுத்தெழும் கேள்வியாகும். தொழிலாளியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு 'மே' நாள் விளங்கியதினால் ஏதோ பொதுவுடமை நாடுகளிற்றான் இவ்விழா எழுந்தது என்று சிலர் கொள்ளக் கூடும்.

## எங்கே 'மே' நாள் தோன்றியது

எப்படி உருசியாவில் தோன்றிய பொதுவுடமை ஆட்சிக்கு வித்திட்ட பெருமகன் கால்மாக்ஸ், இங்கிலாந்தில் வாழ்ந்த சேர்மன் நாட்டு யூதராக விளங்கினரோ அதுபோன்றே 'மே' நாளின் தோற்றமும் உருசியாவில் அமையாமல் முதலாளித்துவ நாடு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவிலேயே தோன்றியது. 1827லேயே அமெரிக்காவிலுள்ள (Philadelphia) பிலாடெல்பியா எனும் இடத்தில் தொழிலாளர்கள் திறுவன அடிப்படையில் 10 மணி நேர வேலை என்ற குரல் முதலில் எழுந்தது. இக் குரல் அமெரிக்காவின் பல பாகங்களுக்கும் பரவியது. 1838ல் அமெரிக்காவின் மக்கட் தலைவர்—சனாதிபதி அரசாங்க ஊழியர்களுக்கு 10 மணி நேர வேலை என்ற சட்டத்தை உருவாக்கினான்.

இத் தொழிலாளர் இயக்கம் 1886ல் சிக்காகோவில் 'மே' முதலில் மாபெரும் இயக்கமாக உருவெடுத்தது. இம் 'மே' விழாவில் எட்டு மணித்தியாலம் வேலை, எட்டு மணித்தியாலம் ஓய்வு எட்டு மணித்தியாலம் உறக்கம் என்றும் முழங்கப்பட்டது.

இத் தொழிலாளர் இயக்கம் கண்டு உருசிய முதலாளிகள் இவர்கள் வன் செயலில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றம்சாட்டி காவலரின் துணை கொண்டு நசுக்க முயன்றனர் எனினும்:

"கொடுமையிலே நசுக்குண்ட
மக்கள்
நெஞ்சம் கொந்தளிக்க
மென் மேலும்
கொடுமை மீற விடுபடுவோம்
இன்றேல்
நாம் வீழ்வோம் என்று மீள
வெறிகொண்டெழுதல்
புரட்சி"

என்ற கூற்றிற்கு அமைய எழுந்த கிளர்ச்சி அமெரிக்காவையே ஆட்டம் காணச் செய்தது. இதன் விளைவால் 1888ல் நடைபெற்ற அமெரிக்க தொழிலாளர் சங்கங்களின் மாநாட்டில் 'மே' நாளை தொழிலாளரின் எழுச்சி நாளாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. 1889ல் பாரீசில் கூடிய பிரெஞ்சுத் தொழிலாளர்கள் 'மே' நாளை அனைத்துலக அடிப்படையில் கொண்டாட வேண்டும் என்று தீர்மானித்தனர். இதற்கமைய 1890ல் அகில உலக அடிப்படையில் இவ்விழா கொண்டாடப்பட்டது. இவ்விழா ஏற்படுத்திய எழுச்சியை பிரெடரிக் எங்செல்ஸ் என்ற அறிஞர் பின் வருமாறு வாழ்த்தினர். "இன்று இந்தச் சொற்றொடர்களை நான் எழுதும்போது ஐரோப்பிய அமெரிக்க தொழிலாளர் வகுப்பு அதன் போராட்ட ஆற்றலை முதல் தடவையாக ஒன்று திரட்டி ஒரு கொடியின் கீழ் நின்று ஒரு உடனடிக் கோரிக்கையான எட்டு மணி நேர வேலைக்காக ஒரு வலிவு மிக்க தேர்வினை நடாத்துகிறது. இன்று இக்காட்சியைக் காணும்போது எல்லா நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்கள் உண்மையிலே ஒன்று திரண்டு விட்டார்கள் என்ற உண்மை எல்லா நாடுகளிலும் உள்ள முதலாளிகள் நில உடமையாளர்களின் கண்களைத் திறக்கும்."

1917ல் உருசியாவில் ஏற்பட்ட ஒப்புரவு (சோசலிச) புரட்சி 'மே' நாளை நாட்டின் விடுமுறையாக உருவாக்க வழிவகுத்தது. இரண்டாம் உலகப் போரை அடுத்து 1945ல் சோசலிசக் கோட்பாட்டைத் தழுவிய ஐரோப்பிய நாடுகளில் 'மே' நாள் கொண்டாடப்பட்டது. 1949ல் மக்கட் சீனவும் இதையடுத்து ஆசிய, ஆபிரிக்கா, இலத்தீன், அமெரிக்கா நாடுகளிலும் 'மே' நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## 'கூலி' எனும் சொல்

இவ்வேளையில் 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்'' என்று அழைப்பு விடும் இந்நாள் தமிழருக்கு உணர்த்தி நிற்கும் உண்மையென்பதை இங்கு யாம் சிந்திக்கவேண்டும். ஆங்கில மொழியின் சொற் பெருக்கத்திற்கு துணை நிற்கும் ஒரு சொல் கூலி என்ற தமிழ்ச் சொல்லாகும். இச்சொல் தமிழருக்கு பெருமையையோ சிறுமையையோ தருகிறதென்பது தனி ஆய்விற்குரிய விடயமாகும். ஆனால் தமிழர் எவரையும் சுரண்டிவாழும் முதலாளிகள் அல்லர். உழைத்து வாழும் உழைப்பாளிகள் என்பதை இக்'கூலி' என்ற சொல் அனைவர்க்கும் அறிவித்த படியிருக்கின்றது. பீஜி, சுமத்திரா, தென் ஆபிரிக்கா, பர்மா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில்வாழும் தமிழ்த்தொழிலாளர்கள் இக் கூற்றின் உண்மையை உலகிற்கு பறைசாற்றுகின்றனர். இதனாற்றான்போலும் 'கிரியர்சன்' என்ற ஆய்வாளர் 'தமிழர்' என்றால் உழைப்பாளிகள் என்றுபொருள் விளக்கம் தந்துள்ளார்.

## தமிழ் இலக்கியம் இயம்பும் சமத்துவம்

சமத்துவம் சோசலிசம், கொமினிசம் போன்ற பிறமொழிச்சொற்களுக்கு 'ஒப்புரவு' என்ற தமிழ்ச்சொல் லினால் தமிழன் கண்ட சமத்துவத்தை வள்ளுவர் உணர்த்துகிறார். ஆகவே சமத்துவக்கோட்பாடு தமிழனுக்குப் புதியதுமல்ல இறக்குமதிப்பொருளுமல்ல என்பது தெளிவு. "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என்றும் "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என்று வள்ளுவன் எழுப்பும் உலகளாவிய கொள்கையும் "கொள்வார் இல்லாததினால் கொடுப்பார் இல" என்றும் "மக்கள் உயிர்-மன்னன் உடல்" என்றும் கம்பன் கண்ட கற்பனை உலகு தமிழனின் பரந்த நோக்கிற்கு பாங்கான சான்றுகளாகும்.

## பாரதியும் பாரதிதாசனும் பகரும் புரட்சி

இவை மட்டுமல்ல இருபதாம் நூற்றாண்டில் "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதி முழங்க, அவனின் தாசன் "கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே" என்றும் முழங்கி நிறைவடையாத நிலையில்,

"ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர் உதையப்பராய் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறிஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ" என்று அடித்துக் கூறிய சொற்கள், தொழிலாளர் நலம்பேணும் பண்பு தமிழர்களில் ஊறிக்கிடக்கும் பண்பு என்பதனை பறைசாற்றிக் கிடக்கின்றன.

## தமிழரின் தொழிற்சங்கப்பணி

இனி இந்தியத் துணைக் கண்டத்திலும் இலங்கை மண்ணிலும் தோன்றிய தொழிற் சங்க இயக்க வரலாற்றினை நாம் உன்னிப்பாகக் கவனிக்கிறோம். அங்கும் தமிழர் பணி தலைதூக்கியிருப்பதைக் கண்டு பெருமிதமும் பேருவகையும் எய்யலாம். 1918 ஏப்பிரல் 28 இந்தியாவில் முதன் முதலில் தொழிற் சங்கஇயக்கத்தைத்தொடங்கிய பெருமை திரு. வி. க. திரு. கேசவபிள்ளை, திரு. செல்வபதிச்செட்டியரர், வ. உ. சி. ஆகியோரையே சாரும் என்பதை நாம் அறியத்தக்கதாய் இருக்கிறது.

## ஈழத்தில் தொழிற்சங்க வளர்ச்சி

ஈழத்தின் "தொழிற் சங்க இயக்கத்தின் தந்தை சேர் பொன். அருணசலமே யென்று அன்னாரின் நூற்றாண்டு நிறைவு விழாவின் போது சில காலத்திற்கு முன்பு பீற்றர் கெளமன் வானொலியில் நிகழ்த்திய உரை வெறும் வெற்றுரையல்ல, மாறாக வரலாற்றில் இடம்பெறும் மறுக்கமுடியாக உண்மையாகும். மற்றும் திரு. கோ. சி. நித்தியானந்தா திரு. வைகுந்தவாசம், திரு. ஆசீர்வாதம் திரு. நடேசையர், திரு. பெரிசுந்தரம், திரு. தொண்டமான் திரு. இராசலிங்கம், திரு. கோடீசுவரன் ஆகியோர் ஆற்றிய தொழிற்சங்கப்பணியை யாம் எளிதில் மறக்கமுடியாது. இவை அனைத்திற்கும் மேலாக தொழிற்சங்கப் போராட்டத்தில் தன் உயிரையே அர்ப்பணித்த கந்தசாமியை எந்த நன்றியுள்ள தொழிலாளியும் மறக்கமுடியுமா?

## தமிழன் கறிவேப்பிலையா?

ஆனால் இன்று ஈழத்தில் நடப்பதென்ன? தொழிற் சங்க இயக்கங்களை வழி நடாத்திய தமிழ்த் தலைவர்களையும், தொழிற்சங்க இயக்கத்திற்கும் தொழிலாளர் போராட்டத்திற்குத் தம்மையே அர்ப்பணித்த தமிழ்த்தொழிலாளர்களையும், சிங்கள அரசுகளும் சிங்களத்தொழிற் சங்கவாதிகளும் தமது தேவைக்கேற்ற முறையில் இவர்களைப்பயன் படுத்திய பின் தூக்கியெறிந்துவிட்டார்கள். பயன்படுத்திய பின் தூக்கியெறியப் படும் கறிவேப்பிலையின் நிலையில் தமிழர் இன்றுள்ளனர். இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் விளங்கும் மலையகத் தமிழ்த் தொழிலாளரின் நிலை என்ன? அரச திணைக்களங்களிலும் மற்றும் அவை சார்ந்தவற்றிலும் பணிபுரிந்த தமிழ் ஊழியர்களின் நிலை என்ன? வேண்டாத வெறுக்கப்படும் பொருளாக வல்லவா நாம் மாற்றப்பட்டுள்ளோம். இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் ஏற்றுமதி இறக்குமதிசெய்யப்படும் பண்டப் பொருளாகவல்லவா தமிழன் இன்று கணிக்கப்படுகிறான்"

## புதிய சிந்தனைவேண்டும் தமிழனுக்கு

இந்நிலையில் இம் 'மே' நாளில் தமிழர் புதிய முறையில் சிந்திக்கத்தொடங்க வேண்டும். சிங்களத்தொழிலாளி "உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுக" என்று முழங்குமுன், தான் முதலில் சிங்களத்தொழிலாளி என்ற இன உணர்வை மொழி உணர்வை பெற்றுத்தான் செயற்படுகிறான் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆகவே தமிழிலும் முதலில் நான் தமிழன், நான் தமிழ்த் தொழிலாளி என்ற இன உணர்வை முதலிற்பெற்றே உலகைத் தழுவ முனைய வேண்டும். தான் வாழமுடியாத நிலையில் உலகை ஓம்ப முயல்வதுபோன்ற மடமை வேறு ஒன்று இருக்கமுடியாது. ஆகவே இம் மே நாளில் தமிழ்த்தொழிலாளி ஒவ்வொருவரும் தம் வருங்காலத்தைப் பற்றி ஆழமாக சிந்திக்கவேண்டும். கூட்டத்தோடு சேர்ந்து "கோவிந்தா" பாடுவதில் எதுவித பயனுமில்லை. தமிழன் வாழ வேண்டின் தமிழன் தன்னை ஆளவேண்டும்'' என்ற மொழி தமிழனின் தாரக மந்திரமாக விளங்கினாற்றான் தமிழனுக்கு வாழ்வு உண்டு தமிழ்த்தொழிலாளிக்கும் வாழ்வு உண்டு. இங்குள்ள தமிழர் ஒன்றுதல் கண்டு எங்கோ பகைவர் ஓடினார் என்ற நிலையை உருவாக்க இம் 'மே' நாள் வழி வகுக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

# தமிழ் தொழிலாளி வாழ்ந்தால்தான் உலகத் தொழிலாளி வாழமுடியும்

---

## தமிழர்......

—2-ம் பக்கத் தொடர்

கள். சமுதாய அமைப்பு மாறவேண்டுமாம், இரத்தப் புரட்சிவேண்டுமாம். தொழிலாளியின் உழைக்கும் கரங்கள்—ஒன்றுபடவேண்டுமாம். கேட்க இனிமையாக இருக்கிறது. இதையேதான் அன்றுதொட்டு அலறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே, மேலே, தலைமைப்பீடத்திலே இவர்கள் பேச்சுச்செல்லாது. மூச்! சிங்களத்தொழிலாளர், தமிழ் தொழிலாளருடன் கை கோர்த்து, முதலாளித்துவ சமுதாயத்தை மாற்றியமைக்கத் தயாராயில்லை. தமிழனுக்கு உதவத் தயாராயில்லை. தமிழ் கம்யூனிட்ஸ் தோழர்கள் இதனை உணர வேண்டும். அப்பொழுது தான் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்கா சொன்னது புரியும்.

—தென்மட்டுவில் வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிமிட நாடகம்

வேலு— என்ன முத்தண்ணன் ஜாஎல தேர்தல் முடிவு என்ன சொல்லுது.

முத்து — என்னத்தை, சொல்ல வேண்டியதைச் சொல்லியிருக்கு... கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான்.

வேலு — விழுந்திருக்கிற அடியைப்பார்த்தால்அடுத்த அரசாங்கம் யூ.என்.பி:தான் அமைக்குமாக்கும்.

முத்து— தம்பி... எது வந்தாலும் எங்களுக்கென்ன? நான்தான் சொன்னேனே எங்களுக்கு இரண்டும் ஒன்றுதான்—அரசாங்கம் தோற்றதாலேயோ யூ. என். பி. வென்றதாலேயோ நாங்கள் சந்தோஷப்படுறதுக்குஒண்டுமில்ல—ஒண்டு அம்மி... மற்றது குழவி... இரண்டுக்கும் நடுவில அரைபடுற சரக்குத்தான் நாங்கள்.

வேலு— நல்லாச் சொன்னீங்க போங்க, அதுசரி அண்ண 18-4-76 சுதந்திரனில முன்பக்கம் "ஆளுங்கட்சிக்கு மரண அடி நிச்சயம்" என்று தலையங்கம் போட்டிருந்துதே. இதப் பார்க்க நம்மடை ஆட்கள் இந்த விஷயத்தில யூ.என்.பிக்கு ஒத்துழைப்புக் கொடுக்கினமோ என்று சிலர் கேட்கினம்.

முத்து—(சிரித்து) வேலு விளங்காத சிலர் இப்பிடித்தான் கதைப்பினம், ஆளும் கட்சி தோற்கும் என்றதால ஐ.தே.க,யை ஆதரிக்கிறோம் என்ற கருத்தல்ல. இவங்கள் எரிச்சுக்கொல்லுறவங்கள் என்றால் அவங்கள் குளிரவைச்சுக்கொல்லுற ஆக்கள்—இவங்கள்சொல்லிப்போட்டுச்செய்வாங்கள். அவங்கள் செய்து முடிச்சுப்பிறகுதான் எங்களுக்குத் தெரிய வரும்... நரி ஊருக்கு அஞ்சிப் புலியூருக்குப் போற அளவிற்கு எங்கட ஆட்கள் அவளவு முட்டாள்களில்லை. ஆளுங்கட்சி தோற்க வேணும் என்று எதிர்பார்த்தினமே தவிர ஐ. தே. கட்சி வெல்லவேணும் என்று ஆசைப்படவில்லை.

வேலு— அப்பிடி எண்டால் இதால என்னதான் நன்மை?

முத்து— அப்பிடிக்கேளு! அம்மாவும் ஆட்களும் இந்த உலகமெல்லாம் லாம் தங்கட ஆட்சிக்கு தமிழர்கள் பெரும்பான்மையாக ஆதரவு தருகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு வந்தினமல்லே அதை வெளிநாடுகளும் ஒருவேளை உண்மை என்று நம்பியிருக்கும்... ஆனால் இந்த எலக்சன் முடிவோட அம்மாட ஆட்சிக்கு அம்மாவின்ர ஆட்களான சிங்களவர்களின் ஆதரவு கூட இல்லை என்றதைப் பறை அடிச்சிருக்குது.

வேலு—என்றாலும் அம்மாட ஆட்கள் தங்களுக்கு இன்னும் ஆதரவு இருக்கு போன முறையைவிட கூடத்தான் வோட்டுக்கிடைச்சிருக்கு என்று சொல்லுகினமே.

முத்து— அது விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கினம் — இது வழக்கம்தானே...?

—அற்லஸ்

## ஏருவூரில் எழுச்சி வெள்ளம்

கடந்த 17. 4. 76 அன்று ஏருவூரில் தமிழ் பேசும் இனத்தின் உணர்வோடு ஒன்றிய தத்துவமாம், தமிழர் கூட்டணியால் நடாத்தப்பட்ட பொதுக்கூட்டம் எதிர்பார்த்ததைவிட வெகு சிறப்பான முறையில் நடந்தது என்பதை எதிரிகளும் ஒப்புக்கொள்வர். மடைதிறந்த வெள்ளம் போல மக்கள் கூடி, கடைசி நிமிடம் மட்டும் கொள்கை விளக்கம் கேட்கத் துடித்து நின்றது இதற்குப் போதிய சாட்சியாகும்.

மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை தலைமை தாங்கிய இக்கூட்டம் கோடை இடியென அன்னாரது தலைமையுரையுடன் ஆரம்பமானது. விடுதலைத்தென்றல் தளபதி அமிர்தலிங்கம் திருமதி அமிர்தலிங்கம் சாவகச்சேரிச் சிங்கம் வி. என். நவரெத்தினம், திருமலை வீரர் நேமிநாதன், உடுவில் புலி தர்மலிங்கம் கல்முனை தந்த டொக்டர் உதுமாலெவ்வை, சட்டத்தரணி சாம் தம்பிமுத்து, திருமதி தம்பிமுத்து ஆகியோரது பீரங்கிச்சொற்பொழிவுகள் உண்மையில் மெய்சிலிர்க்க வைத்தனவே.

வழக்கம் போல தளபதி அவர்களுடைய முழக்கம் பீரங்கியை வென்றுவிட்டது. மட்டுநகர்முதல்வர் தலைமையுரையைச் சுருக்கி, இறுதியில் வழக்கம்போல இங்கமெனக்கர்ச்சித்தது கேட்டுச் செவிடெலாம் ஒலி பெற்றிருக்குமெனலாம். மற்றும் பலர் சிறப்புரை ஆற்றிய இக்கூட்டம் பி. ப. 2 மணி தொடக்கம் இரவு 7மணி வரைக்குமே நடத்த அனுமதிதரப்பட்டது. எனினும் தலைவர்களுடைய முயற்சியினால் இரவு 8 மணிவரையும் நடாத்தப்பட்டதும், அதுவரை தமிழர் வெள்ளம் கரைபுரளாது நின்றதும்' ஆரவாரம் செய்ததும் தமிழர் சுதந்திரத்துக்குப் போராடத்தயாராகி விட்டார்கள் என்பதைக்காட்டுவதாய் இருந்தது.

—ஏருவூர்ப்பரம்.

## த. இ. பேரவை உடுப்பிட்டி

தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்பு வேலைகளை மேற்கொள்ளுமுகமாக பேரவையின் தற்காலிக அமைப்பாளர்களாக ஒன்பதுபேர் இயங்கி வருகிறார்கள். இத்தொகுதியின் மத்திய குழு அமைப்புக் கூட்டம் மே 2ம் திகதி துன்னாலையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இரகுபதி பாலஸ்ரீதரன், பீற்றர்பொன்கலன் நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வார்கள். உடுப்பிட்டித்தொகுதியைச் சேர்ந்த சகல இளைஞர்களும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அமைப்பாளர்கள் விபரம்:

ச. செந்துராசா (அழைப்பாளர்) மு. மகேந்திரம் க. கருணாநிதி, சி. கதிர்காமநாதன், பொன். கணேசன், மா. வீரவாகு, க. சண்முகநாதன், ச. இராஜேந்திரம் எஸ். மகேந்திரம் ஆகியோர்.

# இயக்கச் செய்திகள்

## நெடுந்தீவு தமிழர் கூட்டணிக் கிளை

தொகுதி பா. உ. திரு. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்— திரு. ம. பெனடிற். துணைத்தலைவர் வோ. சுந்தரலிங்கம், செயலாளர் க. கணேசபிள்ளை உபசெயலாளர் பா. யோ. அன்ரன், தனாதிகாரி: கு. தர்மலிங்கம். 15 பேர்கள் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## கவிதைப் போட்டி முடிவுகள்

தமிழ் இளைஞர் பேரவையின் தம்பிலுவில் கிளையினர் நடாத்திய செல்வா பிறந்த தின கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்றவரின் பெயர்வருமாறு:— வி. மகாலிங்கம், தருவேலடி ஒழுங்கை, கொக்குவில், (தமிழ் ஈழம்) இரண்டாம் இடத்தைப் பெற்றவர்:— புரட்சிக்கவி மருதூர் வாணன், மருதமுனை, கல்முனை, தமிழ் ஈழம். மூன்றாம் இடத்தைப் பெற்றவர்:— செல்வி சு. குகேஸ்வரி, இல. 49, 13ம் கிராமம், மண்டூர். (தமிழ் ஈழம்) பரிசு பெற்ற இம்மூன்று பேரைத் தவிர பத்து பேர் பாராட்டும்படியான கவிதைகளை எழுதியுள்ளனர். போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்! போட்டியின் நடுவர்களாக திருவாளர்கள் க. சிந்தாத்துரை, தருமரத்தினம், அரி பிரகாஷ்பதி, அரசரெத்தினம், ஆகியோர் பணியாற்றினர். முதலாம், இரண்டாம், மூன்றும் இடத்தை பெற்ற அன்பர்களுக்கு காலக்கிரமத்தில் பரிசுத் தொகைகள் அனுப்பிவைக்கப்படும்.

—இவ்வாறு தமிழ் இளைஞர் பேரவை தம்பிலுவில் கிளைத்தலைவர் திரு. பொன் கோபாலன் அறிவிக்கிறார்.

## நயினாதீவு தமிழர் கூட்டணி கிளை

தமிழர் கூட்டணியின் நயினாதீவுக் கிளை அமைப்புக் கூட்டம் திரு. கா. பொ. இரத்தினம் பா. உ. தலைமையில் நயினாதீவு சந்தை மைதானத்தில் 2—4—76ம் திகதி இரவு 6-30 மணிக்கு நடந்த கூட்டத்தில் கிளைத் தலைவராக திரு. மு. ச. திருநாவுக்கரசுவும் செயலாளராக திரு. த. விஸ்வநாதனும், பொருளாளராக திரு. சி. க. பொன்னையாவும் உப தலைவராக திரு. நா. க. குமாரசூரியரும் தெரிவு செய்யப்பட்டனர். 12 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது.

## செல்வாவுக்கு மாங்குளத்தில் வரவேற்பு

21-4-76 ஒட்டுசுட்டானில் நடைபெற்ற பிறந்ததின விழாவிற்குச் செல்லும் வழியில் மூதறிஞர் தந்தை செல்வாவுக்கு மாங்குளம் தமிழ் இளைஞர் பேரவையினரும் தமிழ் மகளிர் பேரவையினரும் இணைந்து ஒரு பெரும்வரவேற்பளித்தனர். வர்த்தக நிலையங்கள் யாவும் அலங்கரிக்கப்பட்டு எங்கும் உதயசூரியன் கொடிகள் பறந்தன, தமிழ் மகளிர் பேரவை மாங்குளம் கிளைத் தலைவி திருமதி கமலாதேவி இரகுநாதன் திலகமிட தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. சி. கணேசமூர்த்தி மலர்மாலையணிந்து தந்தை செல்வாவை வரவேற்றார். ஏராளமான ஆண்களும் பெண்களும் திரண்டிருந்தனர். பின்னர் மூதறிஞர் தந்தை செல்வா ஒட்டுசுட்டானுக்குப் புறப்பட்டுச் சென்றார். மதிய போசனத்தைத் தந்தை செல்வாவுக்கும் ஏனைய பா. உறுப்பினர்களுக்கும் மாங்குளம் தமிழர் கூட்டணிப் பிரமுகர் திரு. ஜோ. பி. ஜெயசீலன் வழங்கினார்.

## புளியங்குளத்தில் வரவேற்பு

21—4—76 புளியங்குளம் தமிழ் இளைஞர் பேரவையினரும் தந்தை செல்வாவுக்கு குதூகல வரவேற்பளித்தனர். தமிழ் மகளிர் பேரவையினர் மூதறிஞருக்கு ஆராத்தி எடுத்து திலகமிட்டு மலர்மாலை சூடி வரவேற்றனர். வவுனியா மாவட்ட தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. த. ம. பீற்றர் பொன்கலன் தமிழ் இளைஞர் பேரவையின் புளியங்குளம் கிளைத் தலைவர், திரு. ந. தர்மலிங்கம் இருவரும் தந்தை செல்வா வரவேற்பு ஏற்பாடுகளைக் கவனித்தனர். தந்தை செல்வா நீடுழிவாழவேண்டி புளியங்குளம் விநாயகர் ஆலயத்தில் ஓர் அர்ச்சனையையும் செய்தனர்.

## வடஅல்வையில் இயக்க கிளைகள்!

பருத்தித்துறைத் தொகுதியைச் சேர்ந்த, வடஅல்வை தமிழர் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை ஆகியவற்றின் அங்குரார்ப்பண வைபவம், சென்ற 12-4-1976 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில், இளங்கோ சன சமூக நிலைய மைதானத்தில். நா. ஜெபராசசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, பருத்தித்துறை பா. உ., திரு. க. துரைரத்தினம், உடுப்பிட்டி பா. உ. ஜெயக்கொடி, சட்டத்தரணி கனக மனோகரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

பின்வருவோர் இயக்க கிளைகளின் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

### தமிழர் கூட்டணி

தலைவர்: டாக்டர் பொன் மகாலிங்கம், உபதலைவர்: வே. பாலசண்முகம், செயலாளர்: நா. ஜெயராசசிங்கம், உபசெயலாளர்: கோ. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: சி. அருளானந்தன், நிர்வாக சபை உறுப்பினர்கள் வருமாறு:— வே. கருணாநிதி, க. பேரம்பலம், சி. மகேந்திரன் க. கந்தசாமி, பொ. நடேசன்,

### தமிழ் இளைஞர் பேரவை

தலைவர்: சிவ. மணிகலதன், உபதலைவர்: க. குலதர்மபாலன், செயலாளர்: அல்வை கி. தர்மநாதன், உபசெயலாளர்: வே. செல்வயோகன், பொருளாளர்: க. மணிவண்ணன், உபபொருளாளர்: மு. பகீரதன். நிர்வாக சபை உறுப்பினர்கள் வருமாறு: மு. நவயுவன், க. கிருஷ்ணானந்தமூர்த்தி, கு. நாவேந்தன், மு. நவகுமார், க. மணிவாசகன். கோ. தயாபரன், க. நவரத்தினராசா.

### தமிழ் மகளிர் பேரவை

தலைவி: திருமதி முருகேசபவா, உபதலைவி: திருமதி. ம. இராஜேஸ்வரி, செயலாளர்: செல்வி. சுதந்திராதேவி, உபசெயலாளர்: செல்வி. செ. யோகேஸ்வரி, பொருளாளர்: திருமதி த. இராஜேஸ்வரி உபபொருளாளர்: திருமதி. ஜெ. மனோன்மணி. நிர்வாக சபை உறுப்பினர்கள் வருமாறு: திருமதி. வே. பரிமளகாந்தி, திருமதி அ. பரமேஸ்வரி திருமதி. சி. பாரதி, செல்வி கு. இன்பவதி, செல்வி. பா. கௌரி, க. இராதாமணி, பா. ஜெகசோதி.

### பருத்தித்துறையில் கருத்தரங்குகள்!

தமிழ் இளைஞர் பேரவையின் பருத்தித்துறைக்கிளை சென்ற 28—4—76 புதன் கிழமை குடத்தனையிலும், அல்வாய் வடக்கிலும் இரு கருத்தரங்குகளை நடத்தியது. குடத்தனை கருத்தரங்கிற்கு குடத்தனை த. இ. பே. தலைவர் அல்பிறட்டும், அல்வாய் வடக்கு கருத்தரங்குக்கு திரு. மகேந்திரராசாவும் தலைமைதாங்கினர். திரு. கனகமனோகரன், வி. என். நவரத்தினம் பா. உ, வீ. ஆனந்தசங்கரி பா. உ, ஆகியோர் கொள்கை விளக்கமளித்த இக்கருத்தரங்குகளில் முறையே சி. புலேந்திரனும் சி. தர்மநாதனும் நன்றி நவின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# கணவன் கைது; மனைவி, குழந்தைகள் கண்ணீர்

# இ. தொ. க. தலைவர் தங்கத்துரை நடவடிக்கை!

"இந்தியா செல்ல அனுமதி கோரிய, வாசகால அனுமதிப்பத்திர காலம் முடிவடைந்த தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரித்தெடுத்து தனியே கைது செய்யப்பட்டுகொழும்பிலுள்ள தடுப்புமுகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவாக இவர்களின் மனைவிமக்கள் திக்கற்றவர்களாக மேற்கொண்டு இந்தியா செல்வதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளைச் செய்யவும் வகையற்றவர்களாகத் தவித்து நிற்கின்றனர்"

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவரும் மூதூர் உறுப்பினருமான திரு. அ. தங்கத்துரை சுதந்திரனுக்களித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

28-4-76 மாலை உடப்புசல்லாவ இலங்கைத்தொழிலாளர் கழகக் காரியாலயத்தில் திரு. அ. தங்கத்துரை பா. உ. திரு. ஜெயக்கொடி பா. உ. இருகல மாவட்டப்பிரதிநிதி,வி. ஆறுமுகநாதன் ஆகியோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை கண்டுபேசினர்.

கைது செய்து கொண்டு செல்லப்பட்டவர்களில் சிலர் மே மாத முடிவிற்குள் எதுவித நிர்ப்பந்தமுமின்றி தாங்களாகவே இந்தியா செல்ல ஆயத்தம் செய்திருந்தார்கள் என்றும், வேறு சிலர் சேவைகாலப்பணம், சேமலாபநிதி ஆகியவை கிடைக்காத காரணத்தால் போவதற்கு ஒழுங்குசெய்ய முடியாத நிலையிலும், இலர் சொத்துமாற்ற அனுமதி கிடைக்காமலும், சிலர் ஆணையாளரால் கொடுக்கப்படவேண்டிய 13(2) பகுதி அறிவித்தல் கிடைக்காதபடியினாலும், வாசகால அனுமதி விண்ணப்பப்பத்திரம் கிடைக்காத காரணத்தினாலும் இந்தியா செல்லவேண்டிய ஒழுங்குகளைச்செய்ய முடியாத நிலையில் இருந்திருக்கிறார்கள்.

இவர்களைக் கைதுசெய்து தடுப்பு முகாமில் வைத்திருப்பதால் இங்குள்ள பெண்களும், குழந்தைகளும் இந்தியா செல்வதற்குவேண்டிய ஒழுங்குகளைச் செய்ய முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் இந்தியாசெல்ல முன்பு பல ஆயத்தங்களைச் செய்யவேண்டியுள்ளது. வங்கியிலே பணம் போடுதல், சொத்து மாற்றுதற்கான ஒழுங்குகளைச்செய்தல் பணம்பெறுவது, கொடுப்பது ஆகிய கடன்களைத் தீர்த்தல், தற்காலிகமாக வேலை செய்ததோட்டங்களில் இருந்து சம்பளம் பெறுதல், சேவைகாலப் பணம்பெறுதல் ஆகியவைகளை முடித்துக்கொண்டு தான் இவர்கள் நாடுசெல்ல முடியும்.

இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முகமாக இலங்கை, தொழிலாளர் கழகத் தலைவர் அ. தங்கத்துரை பா. உ. அவர்கள் குடிவரவு குடிஅகல்வு ஆணையாளரைச் சந்தித்து உள்ள நிலைமைகளை எடுத்துவிளக்கி கைதுசெய்யப்பட்டவர்களை உடனடியாகவிடுதலைசெய்ய வேண்டும் என்றும். அத்தோடு இவர்களுக்கும்,வாசகால அனுமதி முடிவடைந்த ஏனையோர்க்கும் இன்னும் மூன்றுமாத காலம் அவகாசம் நீடித்துக்கொடுக்கப்பட வேண்டும். என்லும் கோரியுள்ளார்.

இதுவிடயத்தை குடிவரவு குடியகல்வு ஆணையாளர் பிரதமந்திரியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும், அவரின் ஆலோசனையின்படியேதான் நடவடிக்கை எடுத்தாகவும்திரு. அ. தங்கத்துரைக்கு தெரிவித்தாராம். இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளர் மு. பரராசசிங்கமும் இதற்குப் பலத்த ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.


**செல்லமகால்**

ஜெமினி-நாகேஷ், ஜெய்சங்கர்-ராஜ்ஸ்ரீ நிர்மலாநடித்த-

கே. பாலசந்தரின்

**பூவா தலையா** (புதிய கொப்பி)

**ரீகல்** —நுவரெலியா.

சிவாஜி - வாணிஸ்ரீ நடித்த-

**சிவகாமியின் செல்வன்**

**நெல்சன்** —திருமலை

ஜெமினி, ஜெயலலிதா, பத்மினி, சுந்தரராஜன் நடித்த-

**ஆதி பராசக்தி**

6-வது வாரம்

**கெபிட்டி**

**ரீகல்** (மட்டுநகர்)

முத்துராமன் — சிவகுமார்,
ஜெயசித்ரா —விதுபாலா,
அசோகன் மனோரமா,
தேங்காய்—சுந்தரராஜன் —நடித்த

**எங்கம்மா சபதம்**

டைரக்ஷன்:
எஸ். பி. முத்துராமன்

**கெப்பிட்டல் - பிளாசா** 7-ந் திகதி முதல்

**கௌரவம்**

(ஈஸ்ட்மென் கலர்)
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இரட்டை வேடங்களில் தோன்றும் வண்ணப் படம்.

**7-வது வாரம்** **லிடோ** (யாழ் நகர்)

ஜெய்சங்கர் - சிவகுமார் —நடித்த

**எங்க பாட்டன் சொத்து**

(கலர்)

8வது வாரம் கடைசி வாரம்

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாசா** (வெள்ளவத்தை)

சிவகுமார் கமலஹாசன் ஜெயசுதா —நடித்த

**மேல்நாட்டு மருமகள்**

(கலர்)

**வெலிங்டன்** காட்சியளிக்கிறது —யாழ்நகர்

சீர்காழி கோவிந்தராஜன், டி. ஆர். மகாலிங்கம் நடித்த-

**அகஸ்தியர்** (கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி ,194 ஏ. இலக்கத்தில் 1976ம் வருடம் மே மாதம் 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.